ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

நமக்கெல்லாம் ஸ்வஸ்தனாயிருக்கவேணுமென்ற ஆசையிருக்கிறது. ஸ்வஸ்தனென்றால் தன் ஸொந்த இடத்திலிருப்பவனென்று பொருள். அப்படி ஆசையுண்டாவதால் நாம் ஸொந்தஇடத்திலில்லை யென்றும் வேறு இடத்தில் வந்திருக்கிறோமென்று மேற்படுகிறது, ஸொந்தஇடத்திலிருந்து கொண்டே ஸொந்தஇடஞ் செல்லவேண்டுமென்ற ஆசையுண்டாவதில்லை யல்லவா ! அந்தவிடத்திற்கு நாம் புத்திஸ்வாதீனமாயிருக்கும்போது ஞாபகத்தோடு வந்திருக்கிறோமா ? அல்லது புத்திஸ்வாதீனமாயில்லாமல் மூர்ச்சையடைந்தோ, மயங்கிக்கிடந்தோ உள்ளசமயத்தில் வந்தோமா ? என்று ஆலோசித்தால், புத்திஸ்வாதீனமாயிருந்தபோது வந்ததாகத் தெரியவில்லை, அங்ஙனமாயின், வந்தஸமயமும், காரியமும் தெரிந்திருக்கும். அன்றியும் ஸொந்தஇடம் எது ? எங்கேஉள்ளது ? எவ்வளவுதூரத்திலிருப்பது ? எப்படிச்செல்லவேண்டுமென்ற விபரமும் தெரிந்திருக்கும். அவை ஒன்றாவது தெரிந்ததாகத்தோன்றவில்லை, தெரிந்திருக்குமாயின் வந்தகாரியத்தை முடித்துக்கொண்டு பிரயாஸப்படாமல் ஸ்வஸ்தானம் சென்று ஸுகமாயிருந்து விடலாமல்லவா ? அப்படியாராவது சிரமப்படாமல் ஸுகப்படுவதாகத் தெரிகிறதா ? அங்ஙனமொருவரையும் காண்கிலேம். புத்திமயக்கத்தால் வந்தபடியாற்றான் சிலர் இந்தவிடந்தவிர வேறுவிடமே கிடையாதென்கிறார், வேறுசிலர் ஸாமான்யமாக லோகாந்தரத்தை அங்கீகரித்தும் அதன்ஸ்தானம், ஸ்வரூபம் முதலியவைகளில் விவாதப்படுகின்றனர். பிரமாணவாயிலாக அவை யெல்லாவற்றையுமறிந்தவர்களும் காலதோஷத்தால் அதையடையும் ஸாதனவிஷயத்தில் மிகவும் மூடர்களாயிருக்கின்றார்கள், இவர்களுள் சில கூட்டத்தார் தேசஸேவையே பெரிதென்கிறார், அதற்காக ஜாதிப்பிரிவினையே தொலையவேண்டுமென்று சிலர், அதைத்தொலைக்கமுடியாது ஆனால் சீர்திருத்தி அமைக்கவேண்டுமென்று வேறுசிலர், அதற்காக பிரௌடாவிவாஹம் விதவாவிவாஹம், கலப்புவிவாஹம், இவைகளை ஆதரிக்கச்சங்கம் சேர்க்கவேண்டும். தீண்டாமைமுதலிய பிராசீனக் கொடியவாடிக்கை அடியோடொழிய த்தீவ்ரமான பெருமுயற்சி செய்யவேண்டுமென்று ஊரூராக உபதேசிக்கின்றார் சிலர், இவ்வாறாகச்செய்யப்படும் தேசஸேவையே ஸ்வர்காபவர்க்கஸாதன மென்று இவர்கள் நினைக்கின்றார்கள், ஈசுவரனொருவருண்டென்றும், அவர்தான் பயனளிப்பவர் அதற்குரியஸாதனங்களைச் செய்யும்படி அவர்தான் வேதவாயிலாகக் கட்டளையிட்டாரென்று மிவர்கள் அறியவேமாட்டார்கள் போலும், இஹலோகத்தையே பெரியதாகநினைத்துப் பாடுபடுமிவர்களது பேச்சைக்கேட்டுப்பின்னிட்டுப்பயனையளிக்கும் பரமேசுவரனது கட்டளையைஎப்படி மீறிநடப்பதுஎன்று கவலைப்படுகிறார்பலர், பிரௌடாவிவாஹம் பலத்துவிட்டது, விதவாவிவாஹம், வாடிக்கைக்கு வந்துவிட்டது என்று சிலர் ஸந்தோஷிக்கின்றனர். இப்படியாய்விட்டதே காலமென்று பலர் கஷ்டப்படுகின்றனர், புத்திமோஹத்தால் கஷ்டப்படும் பிராணிகள் ஸர்வக்ஞனான பரமேசுவரன் கட்டளைப்படி நடப்பதே நன்று. சுபம் !

பத்திராதிபர்

ஆர்யதர்மம்.

சுக்ல-௵ வைகாசி-௴ ௩௨

# நாம் செய்யவேண்டியதென்ன?

நம் பாதபூமியில் கிடைத்தற்கரிய மானிடப்பிறவியையடைந்தவர்களுள் இச்சரீரஸம்பந்தத்தையடைவதற்குமுன் நாம் எங்கிருந்தோம். எக்காரணம்பற்றி இங்கு வந்தோம். நாம் செய்யவேண்டியகாரியமென்ன என்பதைப்பலரும் அறியமாட்டார்கள். சரீரஸம்பந்தத்திற்கு முந்தியிருந்தவிடத்தை தெரிந்துகொள்ளவில்லை என்பதோர் ஆச்சர்யமில்லை. தினந்தோறும் ஸுஷுப்தியவஸ்தையில் எங்கு செல்லுகிறோம். திரும்ப ஜாக்ராவஸ்தையில் எங்கிருந்து வருகிறோம் என்பதே ஒருவருக்காவது தெரிந்தபாடில்லை. அப்படியிருக்க சரீரஸம்பந்தத்திற்கு முந்தியுள்ள நிலைமையை எப்படித் தெரிந்துகொள்ளக்கூடும்? இந்த விஷயத்தை பிருஹதாரண்யகசுருதி பாலாகி என்ற பிராமணருக்கும், அஜாதசத்ரு என்ற அரசனுக்கும் நடந்த ஸம்வாதத்தால் நன்கு வெளியிட்டிருக்கிறது. இதுவே இப்படி இருக்கும்பொழுது எக்காரணம்பற்றி இங்கு வந்தோம் என்ற கேள்விக்குத்தக்க உத்தரம் கிடைப்பது மிக அரிதாகும். இந்த விஷயம் பல மதஸ்தர்களுக்கு பலவிதமான வாதங்களுக்கு வந்து ஸித்தாந்தமேற்படுவது சிரமமாயிருக்கிறது. ஆயினும் ஆர்யசாஸ்திரத்தை ஆராய்ந்த சில மகான்களுக்கு இதனுண்மை தெரிந்தேயிருக்கிறது. இது எவ்வாறிருப்பினும் இங்கு நாம் செய்யவேண்டிய வேலை என்ன என்பதை ஒவ்வொருவனும் தெரிந்துகொள்ளவேண்டியதவசியம். ஆனால் இதை எளிதில் தெரிந்துகொள்ளமுடியாது. பலபேர் பலவிதமாகக் கூறும்போது அதனுண்மை வெளிப்படுவது கஷ்டத்திலும் கஷ்டம். நம் மனம்போன போக்கெல்லாம் நடப்பதே நமது வேலை என்று தனக்குத்தானாகவே நிச்சயித்துக்கொண்டு சிலர் பசுக்கள்போல் நினைத்தவிடஞ்சென்று நேர்ந்ததைப்புசித்து கண்டபடி பேசிக்காலங்கழித்துவருகிறார்கள். சில ஸூக்ஷ்மதரிசி

கள் மனம்போனபோக்கெல்லாம் நடப்பது ஸரியான வேலையில்லை. ஆனால் ஒரு பெரியார் சொற்படி நடப்பது நன்று என்று கருதி தன்னிஷ்டம்போல் ஒவ்வொருவரைப் பெரியாராக நினைத்துக் கொண்டு சிறிதுகாலம் அவர் சொற்படி நடப்பதும் அவர் சொல்வது தன் மனதிற்கிசையாதபோது சுயேச்சையாக நடப்பதுமாகத்தான் முன் நினைத்ததற்கே விரோதமாக நடந்துகொண்டுவருகிறார்கள். சில கூட்டத்தார் மகரிஷிகளையே மோசம்செய்தவர்களென்றும் அதை நம் முன்னோர்கள் தெரிந்துகொள்ளவில்லையென்றும் அந்த ஸூக்ஷ்மம் கொஞ்சநாளாகத் தங்களுக்குத் தோன்றிவிட்டதென்றும் அவையெல்லாவற்றையும் மாற்றிவிட வேண்டுமென்றும் பெரியதோர் சூழ்ச்சி செய்துவருகின்றார்கள். இதுவே நாம் செய்யவேண்டிய வேலையென்றும் நினைக்கின்றார்கள். இதுகளெல்லாம் நாம் செய்யவேண்டிய வேலையாகாது. நாம் ஸொந்த இடத்திலிருந்து மதிமயக்கத்தால் இங்கு வந்து பராதீனப்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறோம். அந்த கஷ்டத்தை நிவர்த்திசெய்துகொள்ளவேண்டுமானால் எவரது ஸ்வாதீனத்திலிருக்கிறோமோ, அவர் எப்படி ஆக்ஞைசெய்கிறாரோ, அப்படி நடந்தாலல்லவா கஷ்டம் நீங்கி ஸுகப்படலாம். கீழ்ச் சொன்னவர்களிஷ்டப்படி நடப்போமாகில் பரமேசுவரனது கோபத்தால் நேரும் தீங்கை இவர்களால் விலக்கமுடியுமா? இவர்களது சரீரயாத்திரையையே வியாதி வியாகூலங்களுக்கு இடங் கொடாமல் நடத்திக்கொள்ளமுடியாது இவர்களா பிறரது கஷ்டத்தை விலக்கப்போகிறார்கள்? பிரௌடாவிவாஹம்செய்தால் பிரம்மலோகம் கிடைக்குமென்று பிரமாணமுண்டா? விதவாவிவாஹம் செய்தால் விஷ்ணுலோகம் கிடைக்குமென்று வித்துவான்கள் ஸம்மதிக்கின்றனரா? தீண்டாமையொழித்தால் தேவலோகங் கிடைக்குமென்று தேவேந்திரன் கட்டளையிடுகின்றாரா? எதை நம்பி இவர்கள் சொல்லும் வார்த்தையைக்கேட்பது? வர்ணாச்ரம விபாகத்தை விரட்டத்தலைப்பட்ட கலிமஹாராஜனது சாரபுருஷர்களிஷ்டப்படி நடந்தால் கஷ்டத்திற்கே ஆளாகவேண்டும். விவாஹ மந்திரங்களின் பொருளைப் பராமர்சம்செய்தால் பிரௌடாவிவாஹம் செய்ய இடமிருப்பதாகச் சிலர் ஆர்யச்சிறுவர்களுக்கு ரகஸ்யோபதேசம் செய்கின்றார்கள். இம்மட்டோடா விவாஹமந்திரங்களின் பொருள் நிற்கின்றது? புத்திரர்களைப்பெற்றவள் விவாஹ

மும் ஒரு மந்திரத்தின் பொருளினின்றும் கிடைக்கின்றது. அதாவது மந்திரப்பிரச்னத்தின் 1-வது பிரச்னம். மூன்றாவது கண்டம் இரண்டாவது மந்திரத்தின் பொருள். "ஐச்வர்யத்தையும் புத்திரர்களையும் அக்கினிபகவான் என்பொருட்டுக் கொடுத்தார். பிறகு இந்த ஸ்திரீயைக் கொடுக்கிறார்" என்று ஏற்படுகின்றது. இதில் 'புத்திரர்களைக்கொடுத்தார்' என்று இறந்தகாலத்தைக் குறித்தபடியாலும், 'பிறகு இந்த ஸ்திரீயை' என்றதாலும் விவாஹத்திற்குமுந்தியே அந்த ஸ்திரீ புத்திரர்களைப்பெற்றவளாயிருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது 'புத்திரர்களை' என்று பன்மையிருப்பதால் ஒன்றிரண்டு பெற்றவள் போதாது. மூன்றுக்காவது குறையாமல் பெற்றவளாயிருக்கவேண்டுமென்றும் அந்த மந்திரார்த்தத்தில் தோன்றுகின்றது. மந்திரார்த்தம் தோன்றுகிறபடி செய்வதானால் பிரௌடாவிவாஹம்மாத்திரம் போதாது. புத்திரவதீவிவாஹமும் செய்யவேண்டியதாக நேரும். இப்படியெல்லாம் கற்பனை செய்வது கலிமஹாராஜனுக்குத்தான் திருப்திகரமாயிருக்கின்றது. பாலிகாவிவாஹம் செய்தால் விதவைகளின் ஸங்கியை அதிகப்படுகின்றதேயென்று சிலர் கவலைப்படுகின்றார்கள். விதவையாகாமற் செய்யவேண்டுமாயின் சாஸ்திரத்திற்கூறியவாறு செய்யவேண்டுமேயன்றி சாஸ்திரநிஷித்தமான விதவாவிவாஹத்தை எப்படி அங்கீகரிக்கமுடியும்? சாஸ்திரத்தில் விதவையாகாமலிருக்க வழிகூறப்படுகின்றதோவெனில் கூறப்பட்டிருக்கின்றது அதாவது—முகூர்த்தசிந்தாமணியென்ற முகூர்த்தக்கிரந்தத்தில் 6-வது விவாஹப்பிரகரணத்தில் கன்னிகைக்கு விவாஹம்செய்ய முகூர்த்தம் பார்க்க ஜ்யோதிஷவித்துவானிடம்சென்று ஜாதகத்தைக்காட்டிக் கேட்கவேணுமென்று கூறியபின் பிரச்னலக்கினவசத்தாலும், ஜாதகவசத்தாலும் வைதவ்யயோகங்கண்டால் அதற்குப் பரிஹாரம் கூறப்படுகின்றது.

जन्मोत्थञ्च विलोक्य बालविधवायोगं विधाय व्रतं
सावित्र्या उत पैप्पलं हि सुतया दद्यादिमां वा रहः ।
सल्लग्नेऽच्युतमूर्तिं पिप्पल घटैः कृत्वा विवाहं स्फुटं
दद्यात्तां चिरजीविनेऽत्र न भवेद्दोषः पुनर्भूभवः ॥

"பிரச்னலக்கினவசத்தால் விதவாயோகத்தை கெவனித்தது போல் ஜாதகவசத்தாலும் பால்யத்திலேயே வைதவ்யயோகமிருப்பதை

" बाल्ये विधवा भौमे पतिसंत्यक्ता दिवाकरेऽस्तस्थे "

"ஏழாமிடத்தில் செவ்வாயிருந்தால் பால்யத்தில் விதவையாவாள். அதில் சூரியனிருந்தால் பர்த்தாவால் தள்ளப்படுவாள்" என்பதாதி வசனங்களிற்கூறியவாறு கெவனித்து அதற்குப் பரிஹாரமாக அந்தப்பெண்ணைக்கொண்டு இரஹஸ்யத்தில் ஸாவித்திரீவிரதத்தை யாவது அல்லது பிப்பல (அசுவத்த) விரதத்தையாவது செய்வித்து அந்தப்பெண்ணின் தகப்பன் முதலானவர் கன்னிகாதானம் செய்துகொடுக்கவேண்டும். அங்ஙனமாயின் விதவையாக மாட்டாள். அல்லது நல்ல லக்கினத்தில் இரஹஸ்யமாக அந்தப் பெண்ணுக்கு விஷ்ணுமூர்த்தியோடாவது, அரசமரத்தோடாவது, குடத்தோடாவது விவாஹம் செய்வித்துப்பிறகு பிரஸித்தமாக அந்தப்பெண்ணை தகப்பன்முதலாயினோர் தீர்க்காயுஸ்ஸான வரனைத்தேடிக்கொடுக்கவேணும். இப்படிச்செய்வதில் புனர்விவாஹ தோஷமில்லை" யென்று கூறப்பட்டிருக்கின்றது. இங்கு ஸாவித்ரீ விரதம், அசுவத்தவிரதம் இவைகளின் ஸ்வரூபமும் செய்யும் முறையும், விரதகண்டம், ஞானபாஸ்கரம் முதலிய கிரந்தங்களில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. விஷ்ணுப்பிரதிமாதிகளோடு விவாஹமுறையும் பிரதிமாதானமும் மார்க்கண்டேயமுனிவரால் விரித்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்த பால்யவைதவ்யயோக பரிஹாரம் நிர்ணயஸிந்துவிலும் மூன்றாவது பரிச்சேதம் பூர்வ பாகத்தில் விவாஹப்பிரகரணத்தில்

" अथ परिहारार्थं कन्यावैधव्ययोगे विशेष उच्यते । "

'இனி கன்னிகைகளுக்கு விதவாயோகம் ஜாதகத்தில் பரிஹரிக்க முடியாதபடி பலமாகக் காணப்பட்டால் அதன் பரிஹாரத்திற்காக ஓர் விசேஷம் கூறப்படுகின்றது' என்று தொடங்கி கும்பவிவாஹமும் பிரதிமாவிவாஹமும், பிரதிமாதானமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதில் பிரதிமாதானமந்திரம்

" यन्मया पूर्वजनुषि विघ्नन्त्या पतिसमागमम् ।
विषोपविष शस्त्राद्यैर्हतो वाऽतिविरक्तया ॥

प्राप्यमाणं महाघोरं यशस्सौख्यधनापहम् ।
वैधव्याद्यतिदुःखौघ नाशाय सुखलब्धये ॥

बहुसौभाग्यलब्ध्यैच महाविष्णोरिमां तनुम् ।
सौवर्णीं निर्मितां शक्त्या तुभ्यं संप्रददे द्विज ॥"

"முன்ஜன்மத்தில் பர்த்தாவோடு ஸம்யோகத்தைக் கெடுத்துக்கொண்டு விஷம், கூட்டுவிஷம், ஆயுதம்முதலியவற்றால் பர்த்தாவை நான் ஹிம்ஸைசெய்ததின்பயனாக இந்த ஜன்மத்தில் நேரிடும் மிகக்கொடியதான வைதவ்யம்முதலிய துக்கங்களைப்போக்குவதற்காக சக்திக்கேற்றவாறு ஸௌவர்ணத்தாலமைக்கப்பட்ட இந்த விஷ்ணுப்பிரதிமையை ஸௌமங்கல்லியம் கிடைப்பதற்கும் தானம் செய்கிறேன்"

என்று ஜன்மாந்திரத்தில் பர்த்தாவை அவமதித்து ஸ்வாதந்திரியத்தைப்பெற்றதின் பயனாக வைதவ்யம் வருவதாகக் கூறுகின்றது. தற்காலத்தில் ஸ்திரீஸ்வாதந்திரியகக்ஷிக்காரர் ஸ்திரீகளைப் பிரஸங்கமேடையிலேற்றிவிட்டதே விதவைகள் அதிகப்படுவதற்குக் காரணமென்று சாஸ்திரம் முறையிடுகின்றது. பால்ய விவாஹம் காரணமென்று நவீனர் கூச்சலிடுகின்றார். எவர் கூறுவது ஸத்தியம்? முன்பின்னறிந்து யார் கூறுகின்றார் என்பதை விவேகிகள் ஸாவதானமாய் விசாரித்து நிச்சயித்துக்கொள்ள வேண்டும். ஸ்திரீபுருஷர்கள் அவரவர்கள் தர்மத்தை ஸரிவர நடத்திவந்தார்களாகில் வைதவ்யயோகமே வாராது. ஆகையால் பிரௌடாவிவாஹாதிகள் செய்யவேண்டுமென்பது பிரமத்தாலாம். ஆகவே இதுபோன்றவை நாம் செய்யவேண்டிய காரியமில்லை. அவரவர் ஜாதிக்கேற்ற காலத்தில் உபநயனம் செய்யப்பட்டவுடனே குருகுலஞ்சென்று, வேதமோதி, வேதார்த்தத்தையுணர்ந்து, வர்ணாச்ரமதர்மத்தைத்தவறாது அனுஷ்டிப்பதே நமது கார்யமாகும். சுபம்.

---

பா—ர்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆலயத்தில் நடைபெறும்

# சுக்லவருஷத்திய ஸ்ரீ சங்கரஜயந்திமஹோத்ஸவ வேதாந்தஸபா பிரகடன பத்திரிகை.

ஸ்ரீகைலாஸவாஸியான பரமேச்வரன் ப்ரம்மாதிதேவர்களின்
பிரார்த்தனைக்கிணங்கி லோகக்ஷேமார்த்தமாய் தர்மஸ்தாபனம்
செய்யவேண்டி சுமார் 2,500 வருஷங்களுக்குமுன் இப்புவியில்
காலடி என்னும் க்ஷேத்திரத்தில் அவதரித்து 'ஸ்ரீ சங்கரர்' என்
னும் நாமதேயத்துடன் தேசமுழுவதும் திக்விஜயஞ்செய்து
அநேக துர்மதங்களைக்கண்டித்து ஷண்மதஸ்தாபனஞ்செய்து அத்
வைதமதத்தை நிலைநாட்டி உத்தமமான பல க்ஷேத்திரங்களில் மந்
திரஸ்தாபனங்களைச் செய்தார்கள் என்பதும் ஸ்ரீசங்கரபகவத்பாத
மூர்த்திகள் கடைசியில் மோக்ஷநகரங்களில் ஒன்றாகிய ஸ்ரீகாஞ்சி
க்ஷேத்திரத்தை அடைந்து அந்த க்ஷேத்திரத்தை ஸ்ரீசக்ராகார
மாய் நிர்மாணஞ்செய்து பிந்துஸ்தானத்தில் ஸ்ரீகாமகோடி
பீடத்தை ஸ்தாபனஞ்செய்து ஜகதம்பிகையான ஸ்ரீகாமாக்ஷி
தேவியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீ சக்கிரப்ரதிஷ்டைசெய்தும் ஸர்
வக்ஞபீடாரோஹணம்செய்தும் இன்னும் ஸ்ரீகாமாக்ஷிஸந்நிதா
னத்தில் அர்ச்சாரூபமாய் விளங்கிக்கொண்டு பக்தகோடிகளுக்கு
அனுக்ரஹம் புரிந்தும்வருவது யாவரும் அறிந்த விஷயமே.

அப்பேர்ப்பட்ட ஸ்ரீ பரமாசாரியாளுடைய அவதாரதினமா
கிய நாளது சுக்ல-ஸு சித்திரை-மீ 31௳ (13—5—29) ஸோம
வாரம் முதல் வைகாசி-மீ 9௳ (22—5—29) புதவாரம் முடிய
ஸ்ரீ காமாக்ஷியம்பாள் ஆலயத்தில் ஸ்ரீமத் ஆசார்ய பகவத்பாத
மூர்த்தியின் ஸந்நிதானத்தில் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி
ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞையை
முன்னிட்டு, பிரதிதினம் வேதபாராயணம், உபநிஷத்பாராயணம்,
ப்ரஸ்தானத்ரயபாஷ்ய பாராயணம், மஹந்நியாஸ ஜபம் முதலிய
தும், காலை மாலைகளில் விசேஷ பூஜை, அர்ச்சனை அபிஷேகம்
முதலியது நடத்தி, ஸ்ரீபரமாசாரிய மூர்த்திக்கு ஸாயங்காலத்தில்
பிராகாரப் பிரதக்ஷிண உத்ஸவமும், உடந்நியாஸங்களும், பூர்த்தி
தினமாகிய வைகாசிமீ 9௳ புதவாரத்தன்று ஸ்ரீ அம்பாளுக்கும்
ஆசார்யமூர்த்திக்கும் ஸகலஸந்நாக வைபவங்களுடன் ராஜவீதி

யில் வீதிப்பிரமண மஹோத்ஸவ உத்ஸவம். இவ்விதம் ஸ்ரீமத் ஆசார்ய ஜயந்தி மஹோத்ஸவம் நடைபெறுவதோடு வைகாசிமீ 7௳ (20—5—29) ஸோமவாரம் முதல் 9௳ (22—5—29) புதவாரம் முடிய மூன்று தினங்கள் காஞ்சியில் ஸ்ரீசங்கராசாரிய ஸ்வாமிகள் ஸ்ரீமடத்தில் வேதாந்த வித்வத் ஸதஸ்ஸும் நடத்துவதாய் நிச்சயமாயிருக்கிறது.

ஆஸ்திகமஹாஜங்கள் அனைவரும் ஷை மஹோத்ஸவ காலத்தில் ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்தியைத் தரிசித்தும், வித்வத் ஸதஸ்ஸில் பண்டித உத்தமர்கள் நடத்தும் வாக்யார்த்த ஸத்விஷய உபந்நியாஸாதிகளை சிரவணம் செய்தும், ஸ்ரீபரமாசார்ய பூர்ணாநுக்கிரக பாத்திராளாய் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகளை அடையவேண்டுமாய் க்ஞாபிக்கப்படுகிறது.

T. S ராஜு அய்யர்,
மானேஜர்,
ஸ்ரீ காமாக்ஷியம்பாள்
தேவஸ்தானம், காஞ்சிபுரம்,

K. குப்புஸாமி அய்யர்,
ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்
ஆதீன தர்மகர்த்தா அவர்களாகிய ஸ்ரீ
காஞ்சீகாமகோடி பீடாதிபதிஜகத்குரு
ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள்
ஸ்ரீமடம் ஸ்ரீகார்யம் ஏஜண்டு
கும்பகோணம்.

## ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷித சரிதம்.

(256-வது பக்கத்தொடர்ச்சி.)

### 20. விஷதீர்த்தத்தையுட்கொண்டது.

ஹரிஹரர்களை அபேதமாக தியானிக்கும் பரமாத்வைதிகளான நமது தீக்ஷிதாள் அநுதினமும் சிவவிஷ்ணுக்களை தர்சிப்பது வழக்கம். ஆகையால் விஷ்ணுதர்சனம் செய்யும்போது தீர்த்தத்தில் விஷத்தைக் கலந்துகொடு என்று முன்னூறுபொன்களைப் பூஜகனிடம் தாத்தாச்சாரியார் கொடுத்திருந்ததால் அவ்வர்ச்சகர் ஸமயத்தை எதிர்பார்த்திருந்தார். மஹாவ்யதிபாதம் என்ற புண்ணியகாலத்தில் நமது தீக்ஷிதாள் சிவதர்சனஞ்செய்துவிட்டு விஷ்ணுவையும் தர்சிக்கும்போது அப்பூஜகர் தீர்த்தப்பிரஸாதத்தையளித்தார். அதில் விஷங்கலந்திருப்பதாலேயே கொடுக்கும்

போது அர்ச்சகரின் கைவிரல்கள் சிறிது நடுங்கிற்று. "பாபச் செயலைச் செய்யத்துணிந்தாலும் அவர்களின் செய்கையே வாஸ்தவத்தை வெளிப்படுத்துகிறது." அதனால் நமது தீக்ஷிதாள் அக்கபடத்தையறிந்தபோதிலும் பொருட்படுத்தாமல் கையில் தீர்த்தப்பிரஸாதத்தை ஏற்றுக்கொண்டு காலகூடத்தைப் புசித்த சிவபெருமானைத்தியானித்து ஆப்தவர்க்கங்கள் விரோதிவர்க்கங்கள் இவர்களுக்கு முன்னிலையில் தெளிந்த மனதோடு ஸரஸமான ச்லோகங்களையுரைத்தார்.

न कविः न मुनिः न देवयोनिः परमात्मा शिवएव केवलोऽहम् ।
अमृतं विषमप्यनेकमन्यत् यदभूदेव जनाः कियन्ममैतत् ॥
अरिर्मित्रं विषं पथ्यं दुःखीच सुखशेवधिः ।
अनुकूले जगन्नाथे विपरीते विपर्ययः ॥

"நான் கவியுமல்ல, முனிவனுமல்ல, தேவஜாதியுமல்ல, எங்கும் வியாபியான சிவனே அமிழ்தமும் விஷமும் மற்றுமுள்ள யாவும் என்னிடமிருந்தே உண்டாயின. ஆகையால் ஜனங்களே! இந்த விஷதீர்த்தம் என்னை என்னசெய்யும்?

உலகநாதனுன பரமாத்மா அநுகூலமாயிருந்தால் சத்துருவும் மித்திரனுவான், விஷமும் பத்தியமாகும, துக்கியும் ஸுகம் பெறுவான்" என்று சொல்லிக்கொண்டு யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே "பாலேட்டை கண்ணபிரானும் விஷத்தை நீலகண்டனும் உண்பதுபோல" அவ்விஷதீர்த்தத்தை உட்கொண்டார். அப்போது இந்தஸ்மார்த்தன் இன்றோடு அழிந்தான் என்று தாந்திரிகர்கள் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டனர். ஆனாலோ தீக்ஷிதாளுக்கு அவ்விஷம் பால்போலவே ஜீர்ணமாயிற்று. தீக்ஷிதாள் கிருஹஞ்சென்று சிவாராதனஞ்செய்து ஸ்வஸ்தமாயிருந்தார், சின்னபொம்மன் தனக்கு முன்னமேயே அம்மஹான் மொழிந்ததைநினைத்து அவரைப்பரமசிவனாகவே தீர்மானித்து அவர்களிடம் மிகுந்த பக்தியுள்ளவனானன்.

## 21. சிவ நிர்மால்யம்.

ஒருஸமயம் சிவநிர்மால்யம், உட்கொள்ளத்தக்கதல்ல என்று சிலராலபோதிக்கப்பட்ட வேந்தன் தீக்ஷிதாளிடம் அதைக்கேட்கவே அம்மஹான்வித்வத்ஸபையில் விஸ்தாரமாகஎடுத்துரைத்தார்.

இவ்விஷயம் அம்மஹானியற்றிய சிவார்ச்சனாசந்திரிகையில் தனிப்பிரகரணமாக விரிவாய் கூறப்பட்டிருப்பதால் இங்கு எழுதப்புகுவது அனுவசியகமாகும் ஆகையால் சிவநிர்மால்யத்தின், பேதங்கள், அதன்பொருள். ஆக்ஷேபஸமாதானங்கள் பிரமாணங்கள் ஆகியயாவும் அங்கு கண்டுகொள்ளலாம்.

ஆனாலும், சிறிது ஸாரமாகக்கதையின் ஸந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு எழுத முன்வருகிறேன்.

मदीय भुक्तनिर्माल्यं पादाम्बु कुसुमं दळम् ।
धर्मार्थंच कामञ्च मोक्षञ्च ददते क्रमात् ॥

என்று தொடங்கிக் கூறப்பட்டிருக்கிறது.

"என்னால் அநுபவிக்கப் பட்டநிர்மால்யம், பாதஜலம், புஷ்பம், பத்ரம் என்னும், இவற்றை எவன் ஆதாவுடன் அநுபவவிக்கிறானோ, அவன் முறையே, அறம், பொருள், இன்பம் வீடு என்னும். இவற்றையடைகிறான்." என்னும் வாக்கியங்களால் சிவனுக்கு நிவேதனம்செய்யப்பெற்ற அன்னத்தை உண்ணுதலால் உண்டாம்பயனே மேலானதென்பது காணப்படுகின்றது. "சிவபெருமானுடைய நிர்மால்யத்தைத் தரித்தலும், உண்ணுதலும், ஆகாது" என்று கூறும் வாக்கியங்களால் சிவநிர்மால்யத்தை அநுபவித்தல் கூடாதென்பதும் காணப்படுகின்றது.

ஆகவே சிலவிடங்களில் சிவ நிர்மால்யத்தைக் கொள்ளலாம் என்றவிதியும், கூடாது என்றவிலக்கும் காணப்படுவதால், சிவதீக்ஷையுடையார் சிவநிர்மால்யத்தை உட்கொள்ளலாமென்றும் சிவதீக்ஷையில்லாதார் அதனை உட்கொள்ளலாகாதென்றும் விதிவிலக்குகளுக்கு முரணாதவாறு நிர்ணயம் செய்துகொள்ளல் வேண்டும்.

சிவதீக்ஷையில்லாதார் சிவநிர்மால்யத்தை அநுபவித்தலால் அவருக்கு உண்டாம் துன்பம் சிவபுராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. அது வருமாறு "நிர்மால்யம் என்பதற்கு மலமற்றதாயிருப்பது கொண்டு சுத்தமாயிருப்பது என்பதுபொருள், அது பற்றியே அது ஒருவாராலும் நிந்திக்கப்படாதது சுத்தமான அந்த நிர்மால்யத்தைச் சிவபாவனை அற்றவராயும் அசுத்தராயும் உள்ளவர் ஒருபொழுதும் அநுபவித்தல்கூடாது, சுவையின் விருப்பத்

தால் அநுபவிப்பின் ரௌரவம் என்னும் பெயர்கொண்ட கொடிய நரகத்தையடைவான்" என்பதாம்.

ஆகையால் சிவதீக்ஷையில்லாதார் சிவநிர்மால்யத்தை அனுபவித்தல் கூடாது. சிவதீக்ஷை உடையவர் அனுபவித்தல் கூடுமென்பதும் செவ்வனே விளங்குகின்றதென்பது சிலர்கொள்கை. வைத்திய சாஸ்திரத்தில்,

निर्माल्यसलिलं प्राश्य देवदेवस्य शूलिनः ।
क्षयकुष्ठज्वरश्वासैः मुच्यते किल्बिषैरपि ॥

தேவர்களுக்கும் தேவனான சிவபெருமானுடைய, நிர்மால்ய ஜலத்தை உண்டவனிடத்து க்ஷயம், குட்டம், ஜுரம், சுவாஸம், ஆகிய நோய்கள் அணுகமாட்டா என்றும்,
இராமயணத்தில்,

तत्र देवर्षिगन्धर्वा वसुधातलवासिनः ।
भवाङ्गपतितं तोयं पवित्रमिति पस्पृशुः ॥

தேவர்கள், இருடிகள், கந்தர்வர், ஆகிய இவர்கள் அப்பொழுது பூமியையடைந்து, சிவபெருமானுடைய திருமேனியில் நின்றும் விழுந்த தீர்த்தத்தை மிகவும் பரிசுத்தம் என்னும் காரணங்கொண்டு, புரோக்ஷணஞ் செய்துகொண்டனர் என்றும்,
ஸ்ரீ பாகவதத்திலும்,

किं वा शिवाख्यमशिवं न विदुः त्वदन्ये
ब्रह्मादयः तदवकीर्य जटाः श्मशाने ।
तन्माल्य भस्म नृकपाल्यवसत्पिशाचैः
येमूर्धभिर्दधति तच्चरणावशिष्टं ॥

உன்னிலும் வேறான எந்தப்பிரமன் முதலாயினோர் மயானத்தில் சடைகளை விரித்துக்கொண்டு ஈசுவரனுடைய மாலை, விபூதி, கபாலம் என்னும் இவற்றில் வஸிக்கும், பிசாசுகளுடன் ஈசுவரனுடைய பாதத்திலிருந்தும், வந்த ஜலத்தைச் சிரஸுகளாலேந்துகின்றனரோ, அவர் ஒரு காலத்தும் சிவன் என்னும் பெயரினையுடைய அந்த மூர்த்தியை அமங்களமாக அறியமாட்டார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சிவநிர்மால்யத்தைப்பற்றிய விதிவாக்கியங்களையும், விலக்கு வாக்கியங்களையும், ஆராயுமிடத்து ஒன்பது பக்ஷங்கள் உண்டாகின்றன என்று சிவார்ச்சனா சந்திரிகையில் விரிவாய்க்காணலாம்.

## 22. உலகமே சிவநிர்மால்யம் என்பது

बभूव धरणीरथो जलनिधिर्निषङ्गो विभो-
र्दिवाकरनिशाकरौ दधतुरङ्घ्रितां स्यन्दने ।
हरिश्च हुतभुक्शरौ कमलभूर्नियन्ताप्यभूत्
पुरत्रयविघातिनः किमवशिष्यतेऽतोऽन्यथा ॥

सर्वौषधीनां पतिरस्य पुष्पं गङ्गादितीर्थं तु कपर्दजातम् ।
किं वस्तु निर्माल्यविहीनमास्ते विचार्यमाणे शिव एव सर्वम् ॥

"முப்புரங்களை எரித்த சிவபெருமானுக்குப் பூதேவி இரதமாகவும், இரத்னாகரம் தூணீரமாகவும், சூரிய சந்திரர்கள் சக்கிரங்களாகவும், திருமாலும் அனலனும் அம்புகளாகவும், பத்மயோனி தேர்ப்பாகனாகவும், இன்னும் மற்ற தேவர்கள் ஒவ்வொரு அங்கமாகவும் ஆயினாரல்லவோ, அப்போது சிவத்துக்கடங்காத மிச்சம் யாது உளது? ஸகலமான ஒஷதிகளுக்கும் பதியான சந்திரன் சிரோபூஷணமாயும் தீர்த்தோத்தமமான கங்காதேவி சடைக் கூட்டத்தில் தங்கியும் விளங்குகின்றன. சிவநிர்மால்யமில்லாத வஸ்து எது? விசாரிக்குமிடத்து யாவும் சிவநிர்மால்யமே."

மேலும் இவ்வுலகமனைத்தும் சிவனிடமே தோன்றி முடிவில் அவரது கோபாக்னியால் அழிக்கப்பட்டு அவரது மயானத்தையே சேருகின்றது என்று தீக்ஷிதாள் ஸபையோரை நிஷ்பக்ஷபாதமாய் தீர்மானியுங்கள் என்றார்கள். அப்போது யாவரும் அம்மஹான் உரைத்ததே ஸித்தாந்தமென்று ஒப்புக்கொண்டனர். பிரதிவாதிகள் ஒன்றும் சொல்ல முடியாமல் மௌனத்தாலேயே அவ்வபிப்பிராயத்திற்கு இணங்கினர்.

இதனால் சிவதீக்ஷைபெற்றவர்கள் நிர்மால்யத்திற்கு அர்ஹர் என்றும் அதைப்பற்றின நிந்தாவாக்கியங்கள் அர்த்தவாதங்களாகவும் வேறுகாரணத்தால் ஏற்பட்டனவென்றும், சிவதீக்ஷை பெற்று சிவநிர்மால்யத்தைப் புசிப்பதால் மலம் நீங்கப்பெற்று

ஆத்மசுத்தி ஏற்படுமென்றும் ஸித்தாந்தம் செய்யப்பட்டது. சின்னபொம்மன் ஸம்சயமொழிந்து தீக்ஷிதாளை வணங்கி சிவபக்தியைக் கைக்கொண்டான்:

## 23. வலது கையில் அக்னியைக் காண்பித்தது.

பண்டிதர்களுக்கு வெகுவாய் பொறாமை ஏற்படுவது அக்காலத்தில் அதிகமாய் இருந்ததால் நமது தீக்ஷிதமணிகளுக்கும், தாத்தாச்சார்யாளுக்கும் உள்ள மனஸ்தாபத்தை சிஷ்யர்கள் வலுக்கும்படி செய்துவிட்டனர். இவருடைய சிஷ்யர்களும் நேர்ந்த ஸமயங்களில் சாஸ்திரவாதங்கள் செய்யும்போது உண்டாகும் ஜயாபஜயமே இதற்கு ஒரு முக்கிய காரணமாயிற்று. ஆனாலும் இருவரும் வித்வான்களானதால் ஸ்பஷ்டமாய் வெளியில் விரோதத்தை நடிக்கிறதில்லை தீக்ஷிதாள் உண்மையான அத்வைதியானதால் சிவவிஷ்ணுக்களின் அனுக்கிரஹத்தைப் பூர்ணமாய் பெற்றார். தாதாச்சாரியார் மட்டிலும் ஏதோ மனங்கலங்கி வெளியில் அவ்வளவுப் பிரகாசமாக இடையூறு செய்யாவிடினும் ஏகாந்தமாய் அரசனைக் கலைப்பது முதலான தர்வியாபாரங்களை நிறுத்த முன்வரவில்லை. வேந்தனும் உதாரகுணமுள்ளவனாயிருந்ததால் விஷமிகளாயினும் வித்வான்களை வெளிப்படையாக அவமதிக்கிறதில்லை.

இவ்வாறிருக்க, நமது தீக்ஷிதாள் அரசனுக்கு இடதுகையைத் தூக்கி ஆசிர்வதிப்பது வழக்கம். ஒரு ஸமயம் ஏகாந்தத்தில் அரசனிடம் சென்று தாத்தாசாரியார் ராஜனே? தங்களால் கொண்டாடப்படுகிற தீக்ஷிதர், குனிந்த முகத்தோடு இடது கையால் உம்மை ஆசிர்வதிப்பதுபோல் அவமதிக்கிறார் எனவே அவ்வரசன் புஞ்சிரிப்புக்கொண்டு, பிசுனஸ்வபாவத்தை நன்குணர்ந்து அவரையனுப்பி தீக்ஷிதாளிடம் பிரஸ்தாபிக்கவே ஸபையில் அதற்குச் சமாதானம் கூறுவதாக பதிலுரைத்தார்.

அப்படியே மறுநாள் வித்வத்ஸபையில், ஆசிர்வாதத்தின் முறையை அரசன் கேட்கவே யாவரும் மௌனமாயிருந்தனர். அப்போது தீக்ஷிதாள் பிரமாணவசனங்களுடன் சொல்லிய ஸாராம்சமாவது:— "பரமபாவனமான அக்னிஹோத்திரஞ்செய்பவரின் வலது புஜத்தில் அக்னியிருப்பதால் அவர்கள் ஒருவருக்கொருவர் வலது புஜத்தால் ஆசிர்வாதம் செய்துகொண்டு அபீஷ

டத்தைப் பெருகிறுர்கள். மற்றவர்களுக்கு இடது கையில் அக்னியிருப்பதால் அவ்விதமே ஆசீர்வதித்துக்கொள்வது உசித மானது. இதில் ஐயமுறவேண்டாம். ஸத்பிராம்மணன் மற்ற வர்ணத்தாருக்கு இடதுகையில் ஆசீர்வதிப்பதே சாஸ்திரஸம்மத மானது. வலது கையால் ஆசீர்வதித்தால் ஆசீர்வதிக்கப்படுகிறவ னுடைய வர்க்கத்தையே அக்கையிலுள்ள அக்னி எறித்துவிடும்'' என்பது.

உடனே அரசன் அவர்களின் முகத்தைநோக்கி, தயையோடு க்ஷேமத்திற்குக் குறைவின்றி அவ்வக்னியைக் காண்பிக்கவேண் டும் எனவே தீக்ஷிதாள் வலது புஜத்தை நீட்டி கடாக்ஷத்தால் நோக்கினர். உடனே சூரியகிரணத்தால் சூரியகாந்தக் கல் பற்றி எறிவதுபோல் அக்னி அக்கையில் ஜ்வலித்தது. அரசன் நம்பிக் கைகொண்டு, அச்சமுற்றுத் தணிக்கும்படி வேண்டவே நமது தீக்ஷிதாள் முன்போலவே அவ்வக்னியை வலதுபுஜத்தில் மறையச் செய்தார்.

## 24. சிவபூஜைக்காக, சிவார்ச்சனுசந்திரிகையியற்றியது.

ஸ்ரீமான் தீக்ஷிதாளுக்கு நீலகண்ட தீக்ஷிதர்முதலான மூன்று குமாரர்களும், மரகதவல்லி, மங்களாம்பாள், என்ற இரு கன்னி கைகளுமுண்டு. அப்பெண்களும் இளமைப்பிராயம்முதல் சிவபூஜை செய்யாமல் உண்பதில்லை. அப்பெண்மணிகளை கல்வித் தேர்ச்சி யும், சிவபூஜை சிரத்தையுங்கொண்டவர்களுக்கே கன்னிகா தானம் செய்தனர்.

ஒரு ஸமயத்தில் இரண்டாவது பெண்ணுன மங்களாம்பாள் வீட்டில் விலகியிருந்த ஸந்தர்ப்பத்தில், அசுத்தமாயிருப்பதால் சிவ பூஜை தகாதோ என்று கவலைகொண்டு, தீக்ஷிதாளைக் கேட்கவும் பூஜிப்பது அர்ஹமில்லை என்றுர்கள். அப்போது தமக்கை அக் காலத்தில் எவ்வாறுபூஜிக்கின்றுள் என்கவே ''மானஸிகபக்தியால் செய்யலாம். அவள் அப்படியே செய்கின்றுள்'' என்றுர்கள் அப்பெண் தனது கை, கால்கள், முகங்கள், இவைகளை சுத்தி செய்து மனோபாவனையால் காலிங்கத்தை அர்ச்சித்தாள்.

முன்போலவே இதைப்பற்றி வேந்தனுக்கு விஷமிகள் தெரி விக்கவே வேந்தன் பூஜாக்கிரமத்தை தீக்ஷிதாளிடம் கேட்டுக் கொண்டான். அப்போது தீக்ஷிதாள் கூறியதாவது:—

மானஸிகமான புஷ்பாராதனத்தால் பரமசிவன் பிரஸன்னமாகிறார். திவ்யமானக்ஷீராபிஷேகம் முதலானவைகளைக்காட்டிலும், "நிர்மலமானமனதாலே யாராதிப்பதே பகவானுடைய பிரஸாதத்திற்கு இன்றியமையாதது," பொற்பிரம்பால் பாண்டியன் முதுகிலடித்ததையும், காண்டீவத்தால் அர்ஜுனன் மண்டையைப் பிளந்ததையும், கற்களால் சாக்கியநாயனார் எறிந்ததையும் தான் புசித்து மிச்சமானஇறைச்சியால் வேடன் நிவேதனஞ்செய்ததையும், பகவான் முழுமனதோடு ஏற்றுக்கொள்ளவில்லையா என்ன? ஜாதிவர்ணாசிரமாசாரங்களை அந்தரங்கபூஜாவிஷயத்தில் அபேக்ஷையில்லை இதை வேதவர்ணாசிரம தர்மாகமங்களின் நுட்பமறியாதவர்கள் தூஷிப்பார்கள் எவ்வளவுக்குள் புலன்களின் பாடவம்குன்றவில்லையோ அவ்வளவுக்குள்ளேயே சிவபூஜையைத் தொடங்க வேண்டும். "மனிதனுடைய ஆயுள் நிலையுள்ளதல்ல மரணம் எப்போதுநேருமோ ஆகையால் விரைவிலேயே, ஸகலாபீஷ்டங்களுக்குச்சாதனமான சிவபூஜைசெய்தல் வேண்டும்,"

न त्यजेदसुनिष्क्रान्तौ अग्निहोत्रं शिवार्चनम् ।

என்றபடி உயிர்நீங்கும்போதும் அக்கினிஹோத்திரத்தையும் சிவார்ச்சனத்தையும் விடக்கூடாது என்று உடனே அரசன் அம்மஹானுடைய வாக்கை வேதமாகநம்பிக்கை கொண்டு சிவபூஜை பெற்றான்.

यावज्जीवं पार्थिवाभ्यर्चनोक्तः तातार्योक्तिं त्यज्य चिन्तामिवान्तः ।
तेनाचार्या शंकरस्यार्थितेन श्रीमान्राजा योजितः पूर्वपुण्यैः ॥

"அவ்வரசன் உயிருள்ளவரை பார்த்திவபூஜைசெய்வதில் உறுதிகொண்டு தனக்கு சிந்தைபோலவேஉள்ள தாத்தாச்சாரியாரின் வார்த்தையைத்தள்ளிவிட்டு பூர்வபுண்ணியங்களால் சிவபூஜாதுரந்தரனானான்" பிறகு அவனுடைய வேண்டுகோளுக்கிசைந்து சிவார்ச்சனா சந்திரிகை யியற்றிக்கொடுத்தார்.

சிவார்ச்சனா சந்திரிகையின் முடிவுரையில்.

वेलूरधीशचिनबोम्मविभोरुदारे
चित्ते च धामनि चिरादभिवर्धमानाम् ।
अर्चाविधां पशुपते रमराभिनन्द्या
मित्थं समाचकलमीश्वरशासनेन ॥

सद्राजयोगनिजचंचुरनाहताज्ञा-
शक्त्यादिसारसमुदञ्चितदिव्यतेजाः ।
आवाहनक्रमकलानिपुणोऽतिधीरः
श्रीबोम्मभूपतिलकः शिवपूजकस्स्यात् ॥
करोतु ज्वरकण्ठेशः स्वकीयार्चनचन्द्रिकाम् ।
आकल्पस्थायिनीमेनां द्युस्थले चन्द्रिकामिव ॥
करोतु ज्वरकण्ठेश मृत्युञ्जयपदाम्बुजम् ।
यदाश्रितो नखव्याजाद्भाति जैवातृकस्सदा ॥

"வேலூரை வாஸஸ்தலமாக உடைய சின்னபொம்மராஜாவின் உதாரமான இருதயத்திலும் அவருடைய இல்லத்திலும், நீண்ட நாளாக விருத்தியடைந்து கொண்டிருக்கிறதாயும், தேவராலும் புகழத்தக்கதாயும் உள்ள சிவபூஜாவிதியை சிவபெருமானுடைய ஆணையால் இவ்வாறு செய்துமுடித்தேன்.

இராஜயோகத்தில் உண்மையான ஸாமர்த்தியத்தையுடையவரும் தடையற்ற ஆணைமுதலியவற்றின் வலிமையால் விருத்தியடைந்த திவ்விய தேஜஸ்ஸையுடையவரும், ஆவாஹனமுறையான கலைகளில் தேர்ச்சியுற்றவரும், மிகவும் கம்பீரபுருஷருமாகிய ஸ்ரீ சின்னபொம்மராஜாவானவர் சிவபெருமானை அர்ச்சித்துக் கொண்டு, அனைவருக்கும் மேலாக விளங்குகிறார்.

வாழ்த்து.

சுரகண்டேச்வரமூர்த்தியானவர் இந்த சிவார்ச்சனசந்திரிகையை ஆகாயத்தில் சந்திரனைப்போல் கற்பகாலம்வரைநின்று நிலவும்படி செய்தல்வேண்டும்.

எவரைப்பற்றுக்கோடாகச் சார்ந்த சந்திரன் நகம் என்னும் வியாஜத்தால் அவருடைய மலரடிகளில் பிரகாசிக்கின்றானோ அத்தகைய சுரகண்டேசருடைய மலரடிகளைத் தினந்தோறும் வணங்குகிறேன்." என்று கூறப்பட்டிருக்கிறது.

இந்த வடமொழிநூலையும் அதன் மொழிபெயர்ப்பையும், தேவகோட்டை சிவாகம சித்தாந்தபரிபாலன சங்கத்தார் அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர், ஆகையால் சிவனடியார்கள் பூஜாவிதிஸம்பந்தமான ஸகலவிஷயத்தையும் அதனால் நன்கு தெரிந்து கொள்ளலாம். (தொடரும்) K. V. சுப்பிரமணியசாஸ்திரி.